**செய்தி வெளியீடு எண்:103** **நாள்: 30–01–2012.**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் ஆணைப்படி

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு.**செல்லூர் கே. ராஜூ** அவர்கள் தலைமையில்
ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித்திட்டத்தின்
இணைப்பதிவாளர்/பொதுமேலாளர்களின் ஆய்வுக் கூட்டம்

********

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா** அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ அவர்கள் தலைமையில் இன்று (30.1.2012) மாலை 4.00 மணி அளவில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் செயலாக்கம் குறித்து இணைப்பதிவாளர்/பொதுமேலாளர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது, விளிம்புத்தொகை அளித்தல், பயிற்சிகள் அளிப்பதன் மூலம் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களின் திறனை மேம்படுத்துதல் ஆகியப் பணிகளை ஐந்தாண்டுகால அளவில் செயல்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கான நிதியுதவியை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மாநில அரசுக்கு கடனாக வழங்குகிறது. இந்நிதியுதவியை மாநில அரசு கடன் மற்றும் பங்குத் தொகையாக வழங்குகிறது. மனிதவள மேம்பாட்டு பயிற்சி, ஊக்க ஊதியம், திட்ட கண்காணிப்புக்குழு மற்றும் திட்ட செயலாக்க குழு செலவிற்காக 50% தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தினாலும், 50% தமிழக அரசினாலும் மானியமாக வழங்கப்படுகிறது.

தற்போது ஈரோடு, சேலம், மதுரை, புதுக்கோட்டை, திண்டுக்கல், திருநெல்வேலி, சிவகங்கை, கரூர், நாகப்பட்டினம் மற்றும் வேலூர் ஆகிய 10 மாவட்டங்களில் ரூ.30096.600 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்திற்கு ரூ.12747.827 இலட்சம் அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. நிலுவைத்தொகை ரூ.17348.773 இலட்சத்தை அரசிடமிருந்து பெறவும், இந்த நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள் அனைத்தும் முறையாகவும் துரிதமாகவும் நடைபெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. ப.அண்ணாமலை, இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு. ந. அசோகன், மற்றும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித்திட்டத்தின் இணைப்பதிவாளர் / பொதுமேலாளர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**